

திருவள்ளூர் மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம்! பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்! திட்டம் 10 ஆண்டுகள் நிறைவு பெற்றதற்கான நிகழ்ச்சியில் மகளிர்க்கு திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் 181 பயனாளிகளுக்கு ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் 8 கிராம் தாலிக்கு தங்க நாணயத்துடன் திருமண நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் நாணயம் திருமண நிதி உதவி வழங்கினார். உடன் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ, சட்ட மன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன், துரைசந்திரசேகரன், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் , மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் பொது வெங்கட்ராமன், திருவள்ளூர் நகர் மன்ற தலைவர் உதயமலர்பாண்டியன், மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பொது மேலாளர் சங்கிலிரதி, சமூக நலத்துறை கண்காணிப்பாளர் பார்த்திபன் நகர மன்ற துணை தலைவர் சி.சு. ரவிச்சந்திரன், உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.





திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கலந்துகொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலைத் தூவி மரியாதை செலுத்தி கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவை வெகு விமர்சையாக கொண்டாடுவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாநில நிர்வாகிகள் மாவட்ட சி.எச்.சேகர், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன் திருமதி கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, கோளூர் மு.கதிரவன், பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, கே.சுப்பிரமணி, பி. வெங்கடாஜலபதி டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், ஏ.கே.சுரேஷ், மு.மணிபலன், டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்த்குமார், ஆ.சக்திவேல், நா.பரிமளம் நா.செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், பி.முத்து, ஜி.ரவிக்குமார், க.சு. தமிழ் உதயன், ஜான் (எ)பொன்னுசாமி, அபிராமி குமரவேல், எம்.முரளிதரன், உள்பட பலர் உள்ளனர்.

### தனித்துறையை உருவாக்கி

# மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் ஒளியேற்றிய கழக அரசு!

## அமைச்சர் சா.மு.நாசர் பெருமிதம்!

திருவள்ளூர், பிப். 17

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலக கட்டிடம் ரூபாய்.10,00,000/ மதிப்பில் புனரமைக்கப்பட்டு அதனை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் திறந்து வைத்து 57 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.47,07,950 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவிக்கையில், மாற்றுத்திறனாளிகள் என்று பெயரிட்டு, அவர்களுக்கெனத் தனித் துறையையும் உருவாக்கி, விளிம்புநிலை மக்களான அவர்களது வாழ்வில் விளக்கேற்றியது தி.மு.க. அரசு. மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் அரசாக, அவர்களது நலன் பேணும் அரசாக, அவர்களது உரிமைகளை நிலைநாட்டும் அரசாக திமுக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப் பேற்றவுடன் மாற்றுத்திறனாளிகள் நலன்களை காக்கும் வகையில் மாற்றுத்திறனாளி துறையினை தனது கட்டுப்பாட்டில் உள்ள துறையில் வைத்து பல்வேறு நலத் திட்ட உதவிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அதன் அடிப்படையில் 2024-25-ஆம் ஆண்டிற்கான மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் 13,987 பயனாளிகளுக்கு ரூ.21.88 கோடி மதிப்பில் உதவி உபகரணங்கள் கல்வி உதவித்தொகை பராமரிப்பு உதவித்தொகை சுயதொழில் கலங்கிக் கடன் ஆவின் பாலகம் திருமண உதவித்தொகை ஈம சடங்கு செலவினம் பேருந்து பயண சலுகை வேலை வாய்ப்பு அடையாள அட்டை மற்றும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை போன்ற பல்வேறு திட்டங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.



இன்றைய தினம் மட்டும் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மூலம் 27 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் ரூ.27,48,600/ மதிப்பிலும், 15 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் நவீன செயற்கை அவையங்கள் ரூ.11.15,600/ மதிப்பிலும், 15 பயனாளிகளுக்கு 8 கிராம் தங்க நாணயங்கள் ரூ.8,43,750 மதிப்பிலும் ஆக மொத்தம் ரூ.47,07,950 மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கப்பட்டது.

ஆகவே மாற்றுத் திறனாளி பயனாளிகள் திட்டத்தின் பயன்படுத்தி பயன் பெறுமாறு என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், திருவள்ளூர் நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர் மன்ற துணைத் தலைவர் சி.சு. ரவிச்சந்திரன், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மார்ச் 1 முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாட முடிவு!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!

திருவள்ளூர், பிப். 17-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மீஞ்சூர் அடுத்த நாலூர் பகுதியில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் சி.எச்.சேகர், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்புவாணன், மாநில அயலக அணி துணைச் செயலாளர் ஜி.ஸ்டாலின், அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணைச் செயலாளர் ஏ.ஆர். டி.உதய சூரியன் மாவட்ட கழக துணைச் செயலாளர்



கள் திருமதி கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, கோளூர் மு.கதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, கே.சுப்பிரமணி, பி.வெங்கடாஜலபதி டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், தலைமை கழக வழக்கறிஞர் ஏ.கே.சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் .

இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அப்போது பேசுகையில், திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை இந்த ஆண்டு வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும்.

தி.மு.க.விற்காகவும், தமிழ் நாட்டிற்காகவும் பெருமை சேர்க்கும் கழகத் தலைவர், முதலமைச்சர் பிறந்த நாளை மக்களின் விழாவாக கொண்டாடு வேண்டும். கழகத்தின் பெருமையை பறைசாற்றும் வகையில் நமது மாவட்ட முழுவதும் கழக கொடியை ஏற்றி, ஏழை, எளியவர்கள், மாற்றுதிறனாளிகள், நரிக்குறவர்கள் மற்றும் ஆதரவற்றோர், முதியோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கியும், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள், அறுசுவை உணவு வழங்கியும் வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும். மேலும் மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்றார் .

ஒன்றிய, நகர. பேரூர் கழக செயலாளர்கள் மு. மணிபலன், டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்த்குமார், ஆ.சக்திவேல், நா.பரிமளம் நா.செல்வசேகரன், கா.சு. ஜெகதீசன், பி.முத்து, ஜி.ரவிக்குமார், க.சு.தமிழ்உதயன், ஜான் (எ) பொன்னுசாமி, அபிராமி குமரவேல், எம்.முரளிதரன், மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மேற்கு மாவட்டம் - காரிமங்கலத்தில் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைகள் வழங்கி பேசினார்!

தருமபுரி, பிப். 17-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களின் வழிகாட்டுதல்படி தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் காரிமங்கலம்,மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.மனோகரன் தலைமை வகித்தார்.தருமபுரி நாடாளு மன்ற உறுப்பினர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஆ.மணி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி. பழனியப்பன் கழகத் தலைவர் திராவிடநாயகர் அவர்களின் 72 வது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாக விளக்கியும் கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கியும் சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் கழகத் தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை ஒவ்வொரு ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும், பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டுகளிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது, 2019 தொடங்கி தொடர்ந்து தேர்தல் களத்தில் வெற்றி வீரராய் விளங்கி கொண்டிருக்கும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அவர்களின் 200 தொகுதிகளின் இலக்கு, அதனை தொடங்கி வைத்த ஈரோடு கிழக்கு, சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றுதல், மற்றும் கழக வளர்ச்சிப்பணிகள், தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் மோடி தலைமையிலான ஒன்றிய அரசைக் கண்டித்து தீர்மானம் மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது தொடர்பாக தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் கீரை.விசுவ நாதன், சூடப்பட்டி.சுப்பிரமணி, ராஜேந்திரன்,சத்திய மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் முருகன், பொறியாளர்.சி.கிருஷ்ணகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.எல்.வெங்கடாசலம், ஒன்றிய kalaga செயலாளர்கள் வழக்கறிஞர்.எம்வீடி கோபால், எஸ்.முனியப்பன், அன்பழகன், கண்ணபெருமாள், செங்கண்ணன், ரத்தினவேல், முத்துக்குமார், பி.எஸ்.சரவணன், சிவபிரகாசம்,சக்திவேல், வேடம்மாள்,மாது, டாக்டர்.பிரபு ராஜசேகர், பேரூர் கழக செயலாளர்கள் முல்லைரவி,பி.கே.முரளி, மோகன், கு.கௌதமன் கொ.ஜெயசந்திரன், கே.வி. கே.வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பி.சி.ஆர்.மனோகரன், சென்னகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள், கலைவாணி, குட்டி. மோகன், முத்துஜா,மற்றும் சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர். கலந்து கொண்டனர்.



இராயபுரம் கிழக்கு கல்லறை சாலையில் உள்ள ஐந்து வீடுகளில் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டு வீடு மற்றும் பொருட்கள் எரிந்த செய்தியை அறிந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி நேரில் சந்தித்து ஆறுதல் கூறியும், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் சொந்த நிதியிலிருந்து நிதி உதவி வழங்கினார். இவர்களுடன், இராயபுரம் பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார், வட்ட செயலாளர்கள் கண்ணன், ஆறுமுகம், சென்னை மாநகராட்சி அதிகாரிகள், மாவட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து

# குடியாத்தத்தில் ரேஷன் கடை - பயணிகள் நிழற்கூடம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் திறந்து வைத்தார்!

வேலூர், பிப்.17-

வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி .எம் கதிர் ஆனந்த் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து குடியாத்தம் செதுக்கரை பகுதியில் ரேஷன் கடை மற்றும் எர்த்தாங்கல், பெரும்பாடி, மோடிக்குப்பம் பகுதிகளில் பயணிகளின் வசதிக்காக நிழற்கூடங்களை கட்டப்பட்டது. இதனை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த்திறந்து வைத்தார்.

நிகழ்சிக்கு ஒன்றிய கழக செயலாளர் உள்ளூர் ரவிதலைமை தாங்கினார்.நகர மன்ற உறுப்பினர்கள் ஜி.எஸ்.அரசு, ம.மனோஜ்,அர்ச்சனாநவீன்

சங்கர், ஒன்றிய கழக செயலாளர் அன்பரசன் ஊராட்சி மன்ற தலைவர்கள் அம்மு நெடுஞ்செழியன்,ஆஷாதேவி செழியன், லாவண்யா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்ட மன்ற உறுப்பினர் அமுலுவிஜயன், நகராட்சி மன்ற

தலைவர் எஸ்.சவுந்தராஜன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சிறப்பு அழைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கலந்து கொண்டு ரேஷன் கடையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு பொருட்களை வழங்கினார்.

அதைத்தொடர்ந்து எர்த்தாங்கல், பெரும்பாடி, மோடிக்குப்பம், ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள நிழற்கூடங்களை திறந்து வைத்தார்.

பின்னர்அவர் பேசுகையில் குடியாத்தம் பகுதியில் மத்திய அரசின் சார்பில் கைத்தறி பூங்கா அமைக்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம் சத்தியமூர்த்தி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, உத்திர குமாரி, அரசு மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினர் எம். சத்தியமூர்த்தி, முன்னாள் கூட்டுறவு வங்கி தலைவர் சந்திரன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் ரஞ்சித்குமார், மனோகரன்,

கவுரப்பன்செல்வராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மயிலை கிழக்குப் பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## எஸ்.முரளி பங்கேற்பு! டி.ஜெகதீஸ்பாபு தலைமை!

சென்னை, பிப். 17 -

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி. மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் டி.ஜெகதீஷ் பாபு தலைமையில் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி., மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் த.விக்னேஸ்வரன், தினேஷ் மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் மந்தைவெளி சிருங்கேரி மடம் சாலையில் அமைந்துள்ள மயிலை கிழக்கு பகுதி அலுவலகத்தில் இன்று 17.02.2025 மாலை 6:30 மணி அளவில் ஆலோசனை கூட்டம் நடை பெறுகிறது. இதில் மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி ஆலோசனை வழங்குகிறார்.

பொருள்: கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்க பணி.

இக்கூட்டத்தில் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தா. தீபன், வே.ஹேமந்த்குமார் , பா.குட்டி, மு. நிரஞ்சன்சாய், ர.சுந்தர், பா. அபினேஷ் பாபு மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு டி.ஜெகதீஸ்பாபு கேட்டுக்கொண்டுள்ளார்.

### திருப்பத்தூர் ஒன்றியத்தில்

# விளையாட்டு உபகரணங்கள்!

## அ. நல்லதம்பி எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருப்பத்தூர்,பிப்.17-

துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அமைச்சராக விளையாட்டு வீரர்கள், வீராங்களைகைள ஊக்கப்படுத்துவதுடன் விளை யாட்டுத்துறை மேம்படுத்தி வருகின்றார். அதன் விரிசையில் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளிலுள்ள வீரர், வீராங்கனைகளுக்க உதவும் வகையில் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்க ஆணையிட்டு தொகுப்புகள் ஒன்றிய அளவில் வழங்கப்பட்டது.

இன்று திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், கந்திலி ஒன்றியம் ஆகிய பகுதியிலுள்ள ஊராட்சி மன்ற தலைவர்களிடம் இந்த தொகுப்புகள் வழங்கும் விழா ஒன்றிய அலுவலகங்களில் நடைபெற்றது. திருப்பத்தூர் ஒன்றியத்தில் 34 ஊராட்சிகள் கந்திலி ஒன்றியத்தில் 39 ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி எம்.எல். ஏ வழங்கினார்கள்.

ஒன்றிய சேர்மென்கள். விஜயாஅருணாசலம், திருமதிதிருமுருகன், ஆகியோர் தலைமையில் வட்டார வளர்ச்சி அலுலவர்கள் மணவாளன், ராஜேந்திரன், பிரேம்குமார், பிரேமாவதி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில் ஒன்றிய துணை சேர்மேன்கள். ஞானசேகரன், மோகன்குமார் ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சிமன்ற தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். சிறப்பாக நடைபெற்ற இந்த விழாவில் ஊரகவளர்ச்சி அரசு அலுவலர்கள், கழக முன்னோடிகள், பொது மக்கள்,இளைஞர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



மாற்றுக் கட்சியிலிருந்து விலகி ஸ்ரீராகு தலைமையில் பிரசன்ன விஷால், பிரதாப், ராகுல், நிதிஷ், சுகுமார், ஹரிகரன், தருண், சிவா, ஜெபா, ஆகியோர் நேற்று (16.02.2025) ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12–வது மண்டலகுழு தலைவருமான என். சந்திரன், முன்னிலையில், தி.மு கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்வில் 167 – வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், மாவட்ட பிரதிநிதி வீ.ரமணா ஆகியோர் உடன் இருந்தனர்.